## மொறட்டுவ பல்கலைக்கழகம் - 2015

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 01**

(i) பொறுப்புக்களை நடைமுறைப் பொறுப்பாக வகைப்படுத்துவதற்காக நிறுவனத்தின் பொதுச் செயற்பாட்டு சுழற்சியில் தீர்ப்பதற்கு எதிர்பார்த்தல் வியாபார நடவடிக்கைகளுக்கு அடிப்படையாக வைத்திருத்தல் மற்றும் அறிக்கையிடப்பட்ட திகதியிலிருந்து 12 மாதங்களுக்குள் தீர்த்து வைத்தல் போன்றவற்றை அடிப்படையான நியதிகளாக கொள்ளப்பட வேண்டிய போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 37,251,802 ஏனைய பொறுப்புக்களிலிருந்து தெரிவு செய்து தெரிவாக பரீட்சித்த போது மேற்கூறப்பட்ட நியதிகளுக்குப் புறம்பாக ரூபா 26,811,444 பெறுமதியான 11 விடயங்கள் நடைமுறைப் பொறுப்பாக இனங்காணப்பட்டிருந்தன.

(ii) கணக்கீட்டு நியமங்களின் மூலம் தேவைப்படுத்தடுகின்ற அல்லது அனுமதி வழங்கப்பட்டவைகள் தவிர வருமானம் செலவினங்களில் ஈடுசெய்ய முடியாதிருந்த போதிலும், பல்கலைக்கழகத்திற்குக் கிடைத்த பட்டப்படிப்பு மானியக் கட்டணம் மற்றும் தரப்பரிசோதனைக் கட்டண வருமானத்தில் செலவினம் ஈடுசெய்யப்பட்டிருந்தது. இந்த வருமானத்தை வருமானக் கூற்றில் காண்பிப்பதற்குப் பதிலாக நிதி நிலைமைக் கூற்றில் பிற்போட்ட வருமானமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02**

மீளாய்வாண்டின் போது பல்வேறு நிதியங்களுக்குக் கிடைத்த மற்றும் அதற்கான செலவினங்கள் நிதிப்பெறுவனவுகள் மற்றும் செலுத்துகைகளாக தனித்தனியாக இனங்காணாது பல்வேறு நிதியங்களின் தேறிய வேறுபாடுகள் மாத்திரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03**

நடைமுறையல்லாச் சொத்துக்களுக்காக பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 1,971,794,094 கிரயமான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும்

பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வழுக்களைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

பொதுத் திறைசேரியால் மீண்டெழும் செலவினங்களுக்காக வழங்கப்பட்ட மானியங்களை மிகைத்து செலவிடப்பட்ட பணத்தை திறைசேரியிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டமையை உறுதிப்படுத்தாமல் பெறவேண்டிய பணமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. வருடாந்தம் இவ்வாறு மீளளிப்புச் செய்யப்படாது கடன்பட்டோராகக் காண்பிக்கப்பட்ட திரண்ட மீதி மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 66,947,710 ஆக இருந்தது.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை**

மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்ட ரூபா 1,737,326 தொகையான ஏனைய மூலதனப் பெறுவனவுகள் தொடர்பான பட்டோலை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 தொடர்புடைய தரப்பினருடன் ஏற்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை**

அமைச்சரவையின் அங்கீகாரமின்றி 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு பல்கலைக்கழக வளவில் தாபிக்கப்பட்ட Uni Consultancy Services என்ற பெயருடைய தனியார் கம்பனிக்கு தகவல் தொழில்நுட்ப வெளிவாரிப் பாடநெறி (BIT) வருமானத்தில் ரூபா 2,943,373 தொகையான முகாமைத்துவக் கட்டணம் எவ்வித உடன்படிக்கையுமின்றிச் செலுத்தப்பட்டிருந்தது. இந்தக் கம்பனியின் பணிப்பாளர் சபை, பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும், பல்கலைகழக நிர்வாக மற்றும் நிதி நடவடிக்கைகளுடன் தொடர்புடைய மேல்மட்ட நிறைவேற்று உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கியிருந்ததுடன் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) உடன்படிக்கை மற்றும் பிணைமுறைகளை மீறுதல்**

உடன்படிக்கைகளையும் பிணைமுறிகளையும் மீறிய 38 விரிவுரையாளர்களிடமிருந்து 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த பெறுமதி ரூபா 54,739,462 ஆகும். அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உடன்படிக்கைகளையும் பிணைமுறைகளையும் மீறியதன் காரணமாக 21 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டியிருந்த ரூபா 31,136,898 தொகை தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அதில் 13 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 16,110,522 தொகை 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்டது.

(ii) உடன்படிக்கைகளை மீறிய 08 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 14,978,567 தொகை பல்கலைக்கழக சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு உரிய உத்தியோகத்தர்களினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 வரையிலும் அந்தப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட கடன்கொடுத்தோர் மீதியில் 04 மாதங்கள் தொடக்கம் 51 மாதங்கள் வரையான காலத்தில் தீர்ப்பனவு செய்யாதுள்ள வழங்குனர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 5,849,743 தொகையான மீதி காணப்பட்டது.

### 3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை | |
| (i) XII ஆம் அத்தியாயத்தின் 15.10 ஆம் உப பிரிவு மற்றும் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.18 ஆம் உபபிரிவு | உத்தியோகத்தரொருவருக்கு சம்பளமற்ற விடுமுறை வழங்கும் போது உத்தியோகத்தருக்கு ஏதாவது கடன் பணம் வழங்கப்பட்டிருக்குமாயின் அப்பணத்தை அறவிடுவதற்கு பொருத்தமான ஏற்பாடுகளைப் பிரயோகிப்பதற்கு நிறுவனத் தலைவர் கண்காணித்திருக்க வேண்டியிருந்ததுடன் வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்காக செல்வதற்கு சம்பளமற்ற விடுமுறை கோரிய உத்தியோகத்தருக்கு தான் அவ்விடுமுறையைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் கடன்பணம் செலுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், பல்கலைக்கழகத்தில் சம்பளமற்ற விடுமுறை பெற்றிருந்த 08 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 447,213 கடன்கள் தொடர்பாக மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5 ஆம் உப பிரிவு | எதிர்பார்க்கப்பட்ட திகதிக்கு முன்னர் உத்தியோகத்தர்களின் சேவை முடிவுறுத்தப்படுமாயின் உத்தியோகத்தரினால் மீளச்செலுத்தி பூர்த்திசெய்யப்படாத கடன் பணத்தை அறவிடுவதற்கு எஞ்சியிருக்கும் தொகையை பணிக்கொடை நிதியத்திலிருந்து அறவிட வேண்டியிருந்த போதிலும், சேவையிலிருந்து இராஜினாமாச் செய்த 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 427,213 தொகையான கடன் மீதி தொடர்பாக மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 104((3) மற்றும் (4) | பிரமாணத்தின் பிரகாரம் நட்டப் பெறுமதி ரூபா 1,642,139 தொகையான வாகன விபத்துத் |

| | | |
|---|---|---|
| | | தொடர்பாக ஆரம்ப அறிக்கையும் முழுமையான அறிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 137, நிதிப்பிரமாணம் 226(1) மற்றும் நிதிப்பிரமாணம் 264 | 2015 யூலை மாத மீண்டெழும் செலவினங்கள் தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் போது ரூபா 3,126,117 பெறுமதியான 19 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அங்கீகரிக்கப்படாமலும், ரூபா 6,792,653 பெறுமதியான 35 உறுதிச்சீட்டுக்களில் உரிய அதிகாரம் குறிப்பிடப்படாமலும் மற்றும் ரூபா 1,450,406 பெறுமதியான 24 உறுதிச்சீட்டுக்களில் உரித்தாளிகளினால் பணம் பெறப்பட்டமைக்கான பற்றுச்சீட்டு பெறப்படாமலும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | சகல உயர்கல்வி நிறுவனங்களிலும் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற சகல நபர்களும் வருகை தரும் நேரம், வெளிச்செல்லும் நேரம் என்பவற்றை வரவுப் பதிவேட்டில் குறிப்பிட வேண்டிய போதிலும் கல்விசார் பதவியணியினரின் வருகை மற்றும் வெளியேறுகை கையொப்பமிடப்பட்டிருக்க வில்லை. அதனால் வருகை மற்றும் வெளியேறுகை கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்ளாமல் மீளாய்வாண்டில் கல்விசார் பதவியணயினருக்கு ரூபா 809,992,941 ஊதியம் செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் நிதிசார் விளைவுகள் ரூபா 220,259,676 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 241,609,866 ஆனமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 21,350,190 இனால் குறைவடைந்திருந்தது. செலவினம் ரூபா 364,390,915 இனால் அதிகரித்திருந்த போதிலும், வருமானம் ரூபா 385,741,105 இனால் அதிகரித்தமையினால் மேற்கூறப்பட்ட பற்றாக்குறை குறைவடைந்திருந்தது.

சில முன்னைய ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது தொடர்ச்சியாக நிதி விளைவுகளில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டில் ரூபா 32,112,865 தொகையான பற்றாக்குறை 2015 ஆம் ஆண்டில் ரூபா 220,259,676 ஆக ஏற்பட்டிருந்தது. செலவினங்களுக்கு போதியளவான மீண்டெழும் மானியம் கிடைக்கப்பெறாமை மற்றும் ஏனைய வருமான வழிகள் தொடர்பாகக் கவனம் செலுத்தாமை போன்றன இந் நிலைக்கு காரணமாக இருந்தது. எவ்வாறாயினும், ஊழியர் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு மற்றும் வரி செலுத்துதல் என்பவற்றை கவனத்தில் கொள்ளும் போது பங்களிப்பு மிகையாக இருந்தது. 2011 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை அது தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அதன் அதிகரிப்பு 24 சதவீதமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டின் போது பொறியியல், வாஸ்து விஞ்ஞான மற்றும் தகவல் தொழில்நுட்ப பீடத்திற்காக முறையே 928, 358 மற்றும் 288 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் முன்னைய 05 ஆண்டுகளை கவனத்தில் கொள்ளும்போது மாணவர்களை உட்சேர்த்தல் சீராக அதிகரித்திருந்தது. 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் பொறியியல், வாஸ்து விஞ்ஞான மற்றும் தகவல் தொழில்நுட்ப பீடங்களுக்கு மாணவர்களைச் சேர்க்கும் போது முறையே 10 சதவீதம், 17 சதவீதம் மற்றும் 38 சதவீதம் என்ற அதிகரிப்பைக் காணக்கூடியதாக இருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டிற்காக 3403 மாணவர்கள் விடுதி வசதிகளைக் கோரியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 1107 மாணவர்களுக்கு அதாவது விண்ணப்பித்த மாணவர்களில் 32 சதவீதத்திற்கு மாத்திரமே விடுதி வசதிகள் வழங்கப்பட்டிருந்தன.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக உயர்கல்வி நிறுவனத்திற்கான தாபன விதிக்கோவையின் V ஆவது அத்தியாயத்தின் 7.2 ஆம் பிரிவின் பிரகாரம் துரிதமான நடவடிக்கை எடுக்காமையினால் சேவையை விட்டுச் சென்ற நான்கு உத்தியோகத்தர்களுக்கு அது தொடர்பாக அறிவிப்பதற்கு 1 வருடமும் 03 மாதகாலமும் எடுத்திருந்தது.

(ஆ) பட்டப்பின் படிப்பு கற்கை நடவடிக்கைகளுக்காக 2012 ஏப்ரல் 06 தொடக்கம் 2015 ஏப்ரல் 30 வரை சம்பளத்துடன் கற்கை விடுமுறை பெற்றுச்சென்ற ஒரு உத்தியோகத்தர் குறித்த பட்டப்பின் படிப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்யாமல் மீண்டும் 2015 பெப்ரவரி 05 ஆந் திகதி தொடக்கம் பல்கலைக்கழகத்தின் கடமைக்கு அறிக்கை இட்டிருந்தார். இருந்த போதிலும் பட்டப்பின் படிப்பு நடவடிக்கைகளுக்காக விடுமுறை பெற்றுக்கொள்ளும் போது செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் 14(அ) பந்தியின் பிரகாரம் உரிய உத்தியோகத்தரிடமிருந்து மீளளிப்பு செய்யப்படவேண்டிய ரூபா 1,848,272 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) சில சந்தர்ப்பங்களில் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காதிருந்தமையும் வினைத்திறனான சேவையை வழங்காதிருந்தமையும் அவதானிக்கப்பட்ட போதும் 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை தொடர்ச்சியாக பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளை பராமரித்துச் செய்வதற்காக தனியார் பாதுகாப்புச் சேவை கம்பனியுடன் உடன்படிக்கை செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் அதற்காக ரூபா 18,838,760 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 1995 யூலை 14 ஆந் திகதிய 636 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சையின் பெறுபேறுகள் 03 மாத காலத்தில் விநியோகிக்கப்பட வேண்டியமை அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 மற்றும் 2015 ஆம் கல்வி ஆண்டுகளுக்காக நடாத்தப்பட்ட 143 பரீட்சைகளின் 102 பரீட்சைகளுக்கான பெறுபேறுகள் 03 மாதம் முதல் 20 மாதம் வரையிலான தாமதத்துடன் விநியோகிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் பரீட்சை பெறுபேறுகளை

வழங்குவதிலுள்ள தாமதத்தை ஒட்டு மொத்தமாக எடுப்போமாயின் 71 சதவீதம் ஆன உயர் பெறுமதியைக் கொண்டிருந்தது.

**4.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புலமைப்பரிசில் வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட ரூபா 11,781,905 தொகையான 61 நிதியத்திலிருந்து எந்த ஒரு புலமைப்பரிசிலையும் மீளாய்வாண்டின் போது கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 7,719,399 தொகையான 40 நிதியத்திலிருந்து எவ்வித புலமைப்பரிசிலும் கடந்த 05 ஆண்டுகளில் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எதிர்பார்த்த செயலாற்றல் மட்டத்தை அடையாமையினால் உரிய புலமைப்பரிசில்களை கையளிக்க முடியாதிருந்ததாக உபவேந்தரினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியினரின் பட்டப்பின் படிப்பிற்காக அரசாங்கத்திலிருந்து வழங்கப்பட்ட ரூபா 2,004,487 மானியம் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்பாடறின்றி காணப்பட்டது.

**4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டில் ரூபா 1,426,994 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட துண்டுக் கழிவுகள் கொள்கலன் நிலையம் திட்டமிடப்பட்ட பிரகாரம் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 925,000 கிரயமான மோட்டார் வாகனமொன்று 2013 ஆம் ஆண்டு தொடக்கம் விற்காமல் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டு இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படும் வகையில் பல்கலைக்கழக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**4.5 முறையான பிரகாரம் கையேற்கப்படாத காணியும் கட்டடங்களும்**

மொறட்டுவ பல்கலைக்கழக அமைந்துள்ள புத்தகப் பெறுமதி ரூபா 260,843,500 தொகையான அரசாங்கத்திற்குரிய 55 ஏக்கர் பரப்பளவுள்ள காணி மற்றும் பல்கலைக்கழகத்தினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற முன் உரித்தாளரின் பெயரில் பல்கலைக்கழகத்தால் ஆதனவரி செலுத்தப்படுகின்ற 05 ஆதனங்களை பல்கலைக்கழகத்திற்கு கையேற்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு கணக்காய்வு தொடர்பான தொழில்நிபுணத்துவம் உள்ள உத்தியோகத்தர்கள் போதியளவாக ஆட்சேர்த்து நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 133(அ) மற்றும் (ஆ) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளரின் பிரதான நோக்கமாகவும் உள்ளகக் கண்காய்வுப் பிரிவின் பணியாக நிறுவனத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்ட முன்மொழிவுத் திட்டங்களின் செயல்முன்னேற்றத்தைத் தீர்மானித்தல், செயற்திட்டம் தொடர்பாக பிரச்சினைகளுள்ள துறைகளை கவனத்திற்கொண்டு களப்பரிசோதனைகளை மேற்கொள்ளல் போன்றவை மேற்கொள்ளப்படவேண்டிய போதிலும், போதியளவில் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 05 செலவின விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 21 சதவீதம் முதல் 174 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையாலும், மாணவர் திறன்களை விருத்தி செய்வதற்காக 05 மூலதன உப செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 9,000,000 தொகை நிர்மாண நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டமையாலும் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | - பயன்தரு ஆயுட்காலம் இனங்காணும் போது ஏற்பட்ட வழுக்கள் திருத்தப்படாமை<br>- காணி, ஆதனங்களின் உரித்து கையேற்கப்படாமை. |
| (ஆ) | முற்பணக் கட்டுப்பாடு | செயற்பாடு நிறைவுபெற்ற பின்னர் முற்பணத்தைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை |